Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு ஆனி ௴ 9 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 25 (23 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 178

NEW MASTER
INSTITUTE
Navalar Road, Jaffna.

A/L 87 Weekend Class
8-00— 9-30 Botany
9-30—11-00 Chemistry
12-00— 1-30 Physics
1-30— 3-30 Pure Applied } Maths
கிழமை நாட்களில் மேலதிக வகுப்புகள் நடைபெறும்

A/ 87
DAY CLASS
7-30 — 9-30 Physics
9-30 — 11-30 Chemistry
11-30 — 1-30 Botany
11-30 — 1-30 pure Applied } Maths
Zoo Logy
வகுப்பு நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

## செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தயார்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இந்திய நிவாரண உதவிப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம் தயாராகி வருகின்றது.

இவ்வாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்திய உணவுக் கப்பலில் வரும் பொருள்களை காங்கேசன்துறையில் வைத்துப் பொறுப்பேற்பதற்காக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த 7 பேரின் பெயர்கள் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (உ–ள)

## மூவரும் முஸ்லிம்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இந்திய நிவாரணப் பொருட்களை கையேற்கவுள்ள ஸ்ரீ லங்கா குழுவில் இடம்பெறும் ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மூவரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மூவரும் முஸ்லிம்கள் ஆவர்.

ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்க தலைவரோ காரியதரிசியோ இக்குழுவில் இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாடு இல்லை என ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கம் ஏற்கனவே சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ–ள)

## பிரசைகள் குழுவும் உதவும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இந்திய நிவாரண உணவுப் பொருள்களை கிராமங்கள் தோறும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிப்பதற்கு பிரசைகள் குழுக்கள் உதவி செய்யும்.

—இவ்வாறு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உணவு விநியோக வேலைகளுக்கு உதவி செய்வதற்கு என ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் ஒவ்வொரு பிரசைகள் குழு பிரதிநிதியும், 10 தொண்டர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (உ–ள)

## இருவார காலத்தில் 4 லட்சத்து 60 ஆயிரம் லீற்றர் எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் – குடாநாட்டின் மீது ஸ்ரீலங்கா அரசு விதித்த எரிபொருள் தடை நீக்கப்பட்டதையடுத்து கடந்த 9 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை நான்கு லட்சத்து அறுபதினாயிரத்து நூறு லீற்றர் எரிபொருள்கள் வடக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது எரிபொருள்களை பெற்று விநியோகிப்பதற்கு 48 எரிபொருள் முகவர்கள் முன்வந்துள்ளனர்.

இந்தத் தகவலை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். சிவஞானம் நேற்று தெரிவித்தார்.

மதவாச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்தே யாழ். குடா நாட்டிற்கான எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வடபிராந்திய எரிபொருள் நிலையங்கள் தற்பொழுது விற்பனையில் இருக்கும் சுப்பர்பெற்றோலின் விலையை அடுத்த வாரம் அளவில் லீற்றருக்கு 18 ரூபாயாகக் குறைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ஒரு லீற்றர் பெற்றோல் 19 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (உ-10)

## ★ வியாழன் காலை காங்கேசன் வந்து சேருகின்றன

# இரண்டு கப்பல்களில் நிவாரணப் பொருள்

## அதிகாரிகள், பத்திரிகையாளர் மற்றொரு கப்பலில் "படைஎடுப்பு"!

சென்னை, ஜூன் 23

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இரண்டு கப்பல்கள் நாளை புதன்கிழமை காலை சென்னைத் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்குப் புறப்படுகின்றன.

அவற்றுடன் மூன்றாவது கப்பல் ஒன்றும் கூடச் செல்லும். அதில் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இந்திய அதிகாரிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்களும் "படை எடுக்கிறார்கள்"!

மூன்று இந்தியக் கப்பல்களும் அனேகமாக வியாழக்கிழமை காலை காங்கேசன்துறைமுகம் போய்ச் சேரும்.

நாளை புதன்கிழமை காலை இரண்டு கப்பல்கள் நிவாரணப்பொருள்களுடன் சென்னைத் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

காங்கேசன் துறை துறைமுகத்தில் இரவு நேரத்தில் கப்பல்களை நங்கூரமிடும் வசதிகள் இல்லாத காரணத்தினால் கப்பல்கள் காலையே சென்னையில் இருந்து புறப்படும். மூன்றாவது கப்பலும் அவற்றுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அந்த யுவதிகளுக்கு நடந்தது என்னவோ?

வல்வெட்டித்துறை, ஜூன், 23

வடமராட்சிப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட ஆறு யுவதிகளுக்கும் நடந்தது என்ன அவர்கள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா?

வல்வெட்டித்துறை பிரசைகள் குழு இது தொடர்பாக பிரிகேடியர் ரூபசிங்காவுடன் தொடர்பு கொண்டு அவர்கள் பற்றிய தகவல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

யுவதிகளின் பெற்றோர்கள் கண்ணீருடன் வடமராட்சிப் பகுதி இராணுவ முகாம்களில் அலைந்து வருகின்றனர். (உ–ள–160)

## சிப்பாய்கள் சுட்டு இளைஞன், சிறுமி பலி!

### உடுப்பிட்டியில் சம்பவம்

வல்வெட்டித்துறை, ஜூன் 23

இரண்டு இளைஞர்களை சிப்பாய்கள் கலைத்துச் சுட்டபோது குறிதவறி வீட்டிலிருந்த 13 வயது மாணவி துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி அந்த இடத்திலேயே மரணமானார். இளைஞர்களுள் ஒருவரும் உயிரிழந்தார்.

உடுப்பிட்டி இலக்கணவத்தையைச் சேர்ந்த சோமசுந்தரம் சுசந்தா என்ற மாணவியே இப்படி உயிரிழந்தார்.

இவர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி.

சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது;

நேற்று முன் தினம் பிற்பகல் இரு இளைஞர்கள் நவிண்டிலிலிருந்து நாச்சிமார் கோயில் வீதி வழியாக சைக்கிள்களில் வந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் இலக்கணவத்தையை அடைந்த போது வீதியோரத்தில் புதர் மறைவில் ஒளித்திருந்த சிப்பாய்கள் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சைக்கிளில் வந்தவர்களில் ஒருவரான செல்லர் ஜெயம் என்ற (20 வயது) இளைஞர் அந்த இடத்திலேயே மரணமானார்.

தப்பிச் சென்ற மற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஸியாவின் ஆலோசனை ராஜீவ் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 23

ஸ்ரீலங்கா விவகாரம் பற்றிய பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா - உல் - ஹக்கின் ஆலோசனையை பிரதமர் ராஜீவ் காந்தி நிராகரித்துவிட்டார்.

சார்க் அமைப்பு மாநாட்டுக்கு முன்னோடியாக ஜனாதிபதி ஸியா–உல் - ஹக்கும் பிரதமர் ஜூனியஸ் ஜெயவர்த்தனாவும் பிரதமர் காந்திக்கு இது சம்பந்தமாக கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதி ஸியா–உல் - ஹக்கு மட்டுமே பிரதமர் காந்தி பதில் அனுப்பினார். அப்பதில் கடுமையான தொனியில் அமைந்திருந்தது.

''உங்கள் யோசனை எமக்குத் தேவை இல்லை'

-இப்படி பிரதமர் காந்தி பதிலில் கூறியிருந்தார்,

இரண்டு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினைகளை சார்க் கூட்டத்தில் பரிசிலனை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ஸியா–உல்-ஹக் தனது கடிதத்தில் திரு. காந்தியைக் கேட்டு இருந்தார். (உ–ள)

முச்சந்தி முரளி



பத்திரிகையாளர் படை எடுப்பே உவையை நடுங்க வைக்கப் போதுமே...! தங்கடை பொய்ப் பிரசாரக் குட்டை கப்பலிலை வாறவை புட்டுவிடுவினம் எண்ட பயத்தாலை அவைக்கு நிச்சயம் குலை நடுக்கம் வரும்...!

✶ சித்திரவதையை நிறுத்து ✶ காணாமற்போனவர் குறித்து விசாரணை நடத்து ✶ அரசியல் கைதிகள்பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடு

# ஸ்ரீ லங்கா அரசாங்கத்தை நெருக்குகிறது மன்னிப்புச்சபை!

## மனித உரிமை மீறலை நியாயப்படுத்த முடியாது

லண்டன், ஜூன் 23

★ அரசுப்படைகளினால் கைது செய்யப்படும் தமிழர் சித்திரவதை செய்யப்படுவது; பின்னர் அவர்கள் 'காணாமற் போய்விட்டவர்கள்' என்று அறிவிக்கப்படுவது - ஆகியவற்றை தடுத்து நிறுத்துங்கள்.

★ காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழர் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

★ சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரப்பட வேண்டும்.

- இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை, ஸ்ரீ லங்கா அரசுக்கு அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, இது சம்பந்தமாக நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

### மூவாயிரம் கைதிகள்

அறிக்கையின் சாரம் வருமாறு;

அரசின் தடுப்பு முகாம்கள், சிறைகளில் மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆண்களும் பெண்களும் இவர்களில் அடங்குகின்றனர்.

தமிழ்ப் போராளி அமைப்புக்களுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணையின்றி பல

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

23–06–1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:–
10 24 முதல் 11.54வரை
ராகுகாலம்:–
2.54 முதல் 4.24 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்
பிரதோஷ விரதம்

### ஸ்ரீலங்காவினுள் இன்னொருமுறை

# இந்தியா அத்துமீறினால் தடுத்து நிறுத்துவோம்

## லலித்உறுதி

லண்டன், ஜூன், 23

இந்தியா எமது பிராந்தியத்துக்கு இன்னொரு முறை அத்துமீறல் நடத்தினால் அதை எம்மால் முடிந்த வரையில் திறமையாக தடுத்து நிறுத்துவோம்.



— இப்படி தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

லண்டன் பி. பி. சி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் விமான மூலம் இந்தியா உணவுப் பொதிகள் போட்டது பற்றி அமைச்சர் அத்துலத்முதலியிடம் கேட்கப்பட்டது.

அப்போதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மீண்டும் இந்தியா அத்துமீறி வந்து உணவுப் பொதிகளைப் போடும் நிலை ஏற்படாது என்று நான் நினைக்கின்றேன்.

நிவாரண உதவிகள் வழங்குவது சம்பந்தமான எமது முன் நிபந்தனைகளை இந்தியா கடந்த 17 ஆம் திகதி ஏற்றுக்கொண்டுள்ளது.

சென்ற 3 ஆம் திகதி இந்தியா இதனை ஏற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கண்டி வீதியில்

## ஆனையிறவுக்கு அருகே பாலம் தகர்ப்பு

ஆனையிறவு உப்பளத்துக்கு அருகாமையில் உள்ள பாலம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் நேற்றுயாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பஸ் பயணிகள் பல மணிநேரமாக வெய்யிலில் நிறுத்தப்பட்டனர்.

கண்டி வீதியில் ஆனையிறவு தடை முகாமுக்கும் உப்பளத்துக்கும் இடையில் இருந்த பாலமே தகர்க்கப்பட்டது.

தகர்க்கப்பட்ட பாலத்தை சிப்பாய்கள் பொது மக்களின் உதவியுடன் மூடிவிட்டு வாகனப் போக்குவரத்தை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதித்தனர். (உ-10

### குடாநாட்டின் சிலபகுதி மக்களுக்கு

## அரசின் நிவாரண உணவு மேலும் சில வாரங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் குடா நாட்டின் சகல மக்களுக்கும் அரசின் ஒருவார நிவாரண உணவு வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளோருக்கு மேலும் சில வாரங்களுக்கு உணவு நிவாரணம் வழங்கப்படும்.

இவ்வாறு மாவட்ட அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் நேற்று உத்தியோக பூர்வமாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடமராட்சிப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு 4 வாரத்திற்கும்–

தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவிற்கு 2 வாரங்களிற்கும்–

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு, இருபாலை கிராம சேவகர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகளுக்கு இருவார காலத்திற்கும் — மக்களுக்கு நிவாரண உணவுகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவன்புலம் ம. வி. ஷெல்லினால் சேதம்

பலாலி, ஜூன் 23

ஞாயிறு இரவும் நேற்று அதிகாலையும் பலாலி, கட்டுவன், தொண்டமானாறு, இடைக்காடு முகாம்களில் இருந்து ஏவப்பட்ட அகோர ஷெல் குண்டினால் தெல்லிப்பளையிலுள்ள கட்டுவன் புலம் மகா வித்தியாலயம் மோசமாகச் சேதமடைந்தது.

பன்னிரண்டிற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

மூவர் டுகாயமடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவிலும், அதிகாலை 5 மணியளவிலும் இருதடவைகள் அச்சுவேலிப் பகுதியை நோக்கி இடைக்காடு புதிய மினி முகாமில் இருந்து ஏவப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

### சேவை

சேலைகள் அச்சிடுதல், தையல் வேலைகள் புதிய பழைய கிளை ஸ்தாபனங்கள் விளம்பரப் படுத்தும் அறிவித்தல்களை எழுதவும் பழைய சேலைகளுக்குப் புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன வதயல் வேலைகளைச் செய்யவும், கோவில் திரைச் சீலை விளம்பரச் சீலைகளைத் தேவையான விதத்தில் எழுதவும், பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (434)

### விற்பனைக்கு

**விண்ணப்பபடிவம்**

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கான பிரவேசப் படிவம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் ரூ. 1/50 உடன் சுயவிலாசம் எழுதப்பெற்ற நீண்ட கடித உறையும் அனுப்பவும். மூன்று படிவங்கள் உண்டு. எந்தப்படிவம் வேண்டும் என்பதையும் எழுதவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (1436)


# யாழ். ஆஸ்பத்திரியில் தாதிகள் பற்றாக் குறை

## நோயாளரைப் பராமரிக்கக் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் போதனா வைத்திய சாலையில் போதியளவு தாதிகள், மருத்துவ மாதர்கள் இல்லாமையால் நோயாளிகளை உரியமுறையில் பராமரித்துக் கவனிக்க முடியாதுள்ளது.

இவ்வாறு யாழ்போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திரு சி. எஸ். நச்சினார்க்கினியன் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஆகக்குறைந்தது 360 தாதியர்களும் 34 மருத்துவ மாதர்களும் தேவை.

தற்போது 240 தாதியர்களும், 16 மருத்துவ மாதர்களுமே யாழ் ஆஸ்பத்திரியில்கடமையாற்றுகின்றனர்.

வடமாகாணத்தில் 240 மருத்துவ மாதர்களுக்கான வெற்றிடம் உள்ளபோதும் 17 பேர் மட்டுமே தற்போது புதிதாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

தேவையான எண்ணிக்கை யானோரை தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு எடுத்துப் பயிற்சியளிக்கவும் முடியாதுள்ளது.

தாதிகள் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணம்;

பயிற்சிக்கல்லூரியில் விரிவுரையாளர்கள் தேவைப்பட்டபோதும் 4 பேர் மட்டுமே தற்போது கடமையாற்றுகின்றார்கள்.

இந்த விரிவுரையாளர்களுக்கான பயிற்சி நெறியும் கொழும்பில் தனிச் சிங்களத்தில் மட்டுமே நடத்தப்படுகிறது.

இதனால் தமிழ்ப்பகுதிகளிலிருந்து விரிவுரையாளர்கள் தெரிவுசெய்யப் படுவது கஷ்டமாக இருக்கின்றது.

இவ்வாறும் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார். (உ-எ)

### இலவச வைத்திய உதவி

கொடிகாமம், ஜூன் 23

கொடிகாமம், மீசாலை, வரணி முதலிய இடங்களில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு சாவகச்சேரி வியோகமுக உறுப்பினர்கள் இலவச வைத்திய பரிசோதனை, ஆலோசனை, இலவச மருந்துகள் வழங்கினர்.

சாவகச்சேரி வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரம், டாக்டர் பி. பிலிப்ஸ் ஆகியோரின் அனுசரணையுடன் இவ் வைத்திய உதவி வழங்கப்பட்டது. (உ-75)

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 23

வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பல பாடசாலை ஆசிரியர்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக ஆங்காங்கே தங்கியிருக்கின்றனர். அவர்கள் பொருளாதாரக் கஷ்டம் உட்பட பல நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

இத்தகைய ஆசிரியர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க கல்வி அமைச்சு முன்வர வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு. ந. சிவபாதம் தாம் விடுத்த அறிக்கை ஒன்றில் கோரியிருக்கிறார்.

சில பாடசாலைகள் பல நாட்களாகப் பூட்டப் பட்டுள்ளன. பாடசாலைக்குச் சென்று ஆசிரியர் நேரம் பதியமுடியாத நிலையும் இன்றுள்ளது.

வடமாகாண ஆசிரியர்கள் மூன்றுமாத இடர்கடனுக்கு விண்ணப்பித்து இரு மாதங்கள் முடிந்தும் இன்னும்அவர்களுக்கு இம்முற்பணம் வழங்கப்படவில்லை.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு சில நாட்களுக்காயினும் அவர்கள் பாடசாலைகள் இயங்க முடியாமலிருக்கும்போது விசேட லீவுவழங்கவும்—மூன்று மாத இடர்கடன் வழங்கவும் யாழ் கல்விப் பணிப்பாளர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இப்படி தமது அறிக்கையில் திரு. ந. சிவபாதம் மேலும் கோரியுள்ளார். (உ)

## பறவைக்காவடிகளை பார்வையிட்ட ஹெலி

கொடிகாமம் ஜூன் 23

சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயிலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரதோற்ஸவத்தின் போது இடம்பெற்ற தூக்குக் காவடிகளையும், பறவைக்காவடிகளையும் அச்சமயம் அப்பகுதிக்கு வந்த ஹெலிகொப்டர்கள் தாழப்பறந்து வட்டமிட்டவண்ணம் உன்னிப்பாகக் கவனித்தன.

முதுகில் வேல்பாய்ச்சி டிரக்டர்களில் தொங்கும் கயிறுகளில் தொங்கியவாறு காவடிகளைத் தூக்கிச் சென்ற பக்தர்களை ஹெலிக்கொப்டர்கள் நோட்டமிட்டுச் சென்றன. (உ-75)

## 'அலை அரசி' படகு திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூன்23

நயினாதீவுக்கான சேவையில் ஈடுபட்டு பின்னர் பழுதடைந்து இருக்கும் 'அலை அரசி' படகு தற்போது திருத்தப்பட்டு வருகிறது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் அரச அதிபர் செய்துகொடுத்துள்ளார்.

இயந்திரக் கோளாறு காரணமாக நீண்ட காலம் இப்படகு சேவையில் ஈடுபடவில்லை.

குமுதினிப் படகு மட்டுமே நயினாதீவு சேவையில் ஈடுபட்டதாயினும் கடந்த சில நாட்களாக குமுதினிப் படகுச்சேவையும் நிறுத்தப்பட்டது.

இதனால் பொதுமக்கள் பெரும் கஷ்டமுற்றனர். இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து தற்போது 'குமுதினி' சேவை ஆரம்பிக்கப்பட்டுளளது. (உ-10)

### பிரசைகள்குழு உதவும்

வேலணை, ஜூன் 23

யாழ் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேலணை உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக வந்து தங்கியிருப்போர் தமது விவரங்களை வேலணை பிரசைகள் குழுவிடம் தெரிவிக்குமாறும்—

இவர்களுக்கான நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுக்க பிரசைகள் குழு ஏற்பாடு செய்யும் எனவும் குழுத் தலைவர் திரு. சி. இராசரெத்தினம் தெரிவித்துள்ளார்.

### உதவி வழங்க கோரிக்கை

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் தங்கியிருக்கும் ஆயிரத்து 250இடம்பெயர்ந்த மக்களுக்கும் நிவாரணம் அளிப்பதற்காக இவர்களைப் பராமரித்துவரும் சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பொதுமக்களிடமிருந்தும் பொதுஸ்தாபனங்களிடமிருந்தும் உதவி கோரியுள்ளது, (உ-ரி)

## வடமராட்சி அனர்த்தங்கள்:

## தளபதியிடம் கூறுமாறு ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 23

இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சியில் இடம்பெற்ற அனர்த்தங்களை கூட்டுப் படைகளின் தளபதியைச் சந்தித்துகூறும்படி ஜனாதிபதி தன்னைச் சந்தித்த கொழும்பு இந்துப் பிரசைகள் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

முன்னாள் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் தலைமையில் இக்குழு கடந்த வெள்ளி ஜனாதிபதியைச் சந்தித்தது.

இராணுவ நடவடிக்கையின்போது பொது மக்கள் கொல்லப்பட்டனர். உடைமைகள் சேதமாக்கப்பட்டன. மக்கள் அகதிகளாகப் பொது இடங்கள், உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். ஆலயங்கள் சேதமாக்கப்பட்டன.

இப்படி தூதுக்குழு ஜனாதிபதியிடம் முறையிட்டது

கூட்டுப் படைகளின் தளபதியிடம் இவற்றைக் கூறும்படி ஜனாதிபதி, குழுவைக் கேட்டுக் கொண்டார். (உ-எ)

### பிரசைகள் குழுவின் நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன்23

சுழிபுரம் கிராம சபை பிரசைகள் குழுவினர் 15 ஆயிரம் ரூபா நிதியை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சுழிபுரம் கிராமசபை பிரசைகள் குழுக்களின் தலைவர் இ. விஜயரத்தினம், அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் பேராசிரியர் சிவத்தம்பியிடம் இந்தப் பணத்தை வழங்கினர். (உ-எ)

## தமிழரைப் பிளவுபடுத்த முயலும் சக்திகளை இனம் காண்போம்

### பிரசைகள் குழுத் தலைவர் உரை

கிளிநொச்சி, ஜூன் 23

பிரச்சினைகளை பெரிது படுத்தும் நோக்குடன் எமது மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களை இந்தியத் தமிழர் என்றும் இலங்கைத் தமிழர் என்றும் கூறி அவர்களைப் பிளவுபடுத்த சில தீய சக்திகள் முயன்று வருகின்றன. அவ்வாறு தூபமிடுபவர்களை மக்கள் இனம்கண்டு தக்க பதிலடி கொடுக்க வேண்டும்.

—இவ்வாறு கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கிளிநொச்சி பிரசைகள் குழுவின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய குழுவின் புதிய தலைவர் திரு. சு. சிவராசலிங்கம் குறிப்பிட்டார்.

குருகுல நிர்வாகியும் கடந்த கால பிரசைகள் குழுவின் உப தலைவருமான திரு. வே. கதிரவேலு தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

நடப்பு வருட பிரசைகள் குழுவின் செயலாளராக திரு. ஐ. நடராசாவும், பொருளாளராக திரு. அ. பஞ்சலிங்கமும், உபதலைவர்களாக திரு. கே. யோகராசா, திரு. எம். ஆர். ராஜா ஆகியோரும் உபசெயலாளராக திரு. எம். சிவபாலனும் தெரிவு செய்யப் பட்டனர்.

ஏனைய கிராம சேவகர் பிரிவுகளை உட்படுத்தி பதினைந்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-76)

### இழப்பு ரூபா 3 லட்சம்

பலாலி, ஜூன் 23

அச்சுவேலியில் அண்மையில் நிகழ்ந்த இராணுவ அசம்பாவித சம்பவங்களினால் அச்சுவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ மூன்றுஇலட்சம்ரூபாவை இழந்துள்ளதென சங்கத் தலைவர் திரு. த. கமலநாதன் தெரிவித்தார்.

அச்சுநகர், பத்தமேனி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலிமத்தி, புத்தகக்கடை, இரும்புக்கடை களஞ்சியம், புடைவைக்கடை என்பவற்றில் இருந்து காசாகவும் பொருளாகவும்கொள்ளையடிக்கப்பட்ட தொகையே இது என அவர் தெரிவித்தார். (உ-119)

## கிளிநொச்சியில் மாதிரிப் பயிர்ச் செய்கை

கிளிநொச்சி, ஜூன் 23

உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டு வந்த மாதிரிப் பயிர்ச் செய்கை இம்முறை திருவையாறு மூன்றும் பகுதியில் மேற்கொள்ளப் படும்.

கிளிநொச்சி விவசாய விரிவாக்கப் பகுதியினர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இம் மாதிரிச் செய்கையில் ஈடுபடுவதற்கு என 26 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவசாயிகள் தலா கால் ஏக்கர் நிலத்தில் அவரையினப் பயிர்களுக்கான மாதிரித் துண்டங்களை அமைத்து மாதிரிப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள விவசாய விரிவாக்கப் பகுதியினர் ஊக்குவிப்பர்.

இவ் விவசாயிகளுக்கு இலவச விதை தானியம், பசளைவகை, மருந்து வகைகள் என்பன வழங்கப்படும்.

நவீன செய்கை முறைகள் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது பற்றியும் விளக்கம் அளிக்கப்படும். (உ-76)

## மட்டக்களப்பில் 11 பிரதேச சபைகள்

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எட்டு உதவி அரச அதிபர்கள் பிரிவுகளிலும் முஸ்லிம்கள் நலன் கருதி மேலதிகமாக மூன்று பிரதேச சபைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

இதனால் இம்மாவட்டத்திற்குரிய பிரதேச சபைகளின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

மண்முனை வடக்கு உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து காத்தான்குடியும் (பட்டினசபைப் பகுதியும்)—

ஏறாவூர் - செங்கலடி உதவி அரசபிரிவிலிருந்து ஏறாவூரும் (ஏறாவூர் பட்டினசபை முஸ்லிம் பிரிவுகளும்)—

வாழைச்சேனை உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து கோறளை பற்றுப் பிரிவும் (ஓட்டமாவடி கிராமசேவகர் பகுதி வாழைச்சேனை முஸ்லிம் பகுதி) ஆகியனவும்—

முஸ்லிம்களுக்கென உருவாக்கப்பட்டுள்ள புதிய சபைகளாகும். (உ-...)

### அவசரசிகிச்சை பிரிவு

வேலணை, ஜூன் 23

தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் ஊர்காவற்றுறை பிரிவுக்கு டாக்டர் விஸ்வேஸ்வர ஐயர் தலைமையில் அவசர சிகிச்சைப் பிரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### நண்பகலுக்கு முன்னரே அமைதி

வல்வெட்டித்துறை, ஜூன் 23

வடமராட்சிப் பகுதியில் தினமும் காலை 10 மணிக்குப்பின் மயான அமைதி நிலவுகின்றது.

தினமும் அதிகாலையில் கலகலப்பாக ஆரம்பிக்கும் மக்கள்நடமாட்டம், சிப்பாய்களின் நடமாட்டத்துடன் காலை 10 மணியுடன் அடங்கிவிடுகிறது. (உ-எ-160)

## உடுவில் பகுதியில் சேதமுற்ற வீடுகள்

மானிப்பாய், ஜூன் 23

உடுவிலில் கடந்த சனியன்றுபொம்மர்கள்நடத்திய தாக்குதலில் சேதமுற்ற வீடுகளின் விவரம் வருமாறு:-

உடுவில் டச் வீதியில் உள்ள வண வின்சிலோ போதகரின் வீடு முற்றுகச்சேதமடைந்தது. ஓடுகள், மரங்கள்யாவும்முறிந்து தரைமட்டமாகியுள்ளன.

இவ்வீட்டுக்கு எதிரே இருந்த திரு. ரி. ஆர். ஜே. ஜெயராசா என்பவரின் வீட்டு முன்பகுதி இரண்டு அறைகள், குசினி ஆகியன சேதமாக்கப்பட்டன.

திரு. வெல்த் பாலசிங்கம் என்பவரின் வீடும் முற்றாகச் சேதமாக்கப் பட்டுள்ளது.

திரு. செல்வம் கனகசிங்கம் என்பவரின் வீட்டுக் கண்ணாடி ஜன்னல்கள் யாவும் நொருங்கியுள்ளன. கார் கராஜ் ஒன்றும் குண்டு வீச்சால் சேதமடைந்துள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரி வளவில் விழுந்த குண்டு ஒன்றினால் கட்டடத்தின் ஒரு பகுதி சிறிது சேதத்துக்குள்ளானது.

குண்டுகள் போடப்பட்டதையடுத்து, மொம்மர் விமானங்களில் இருந்து 50 கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

திரு. ஜெயராசா என்பவரின் வீட்டுச் சுவரை ரவைகள் தாக்கிச் சேதப் படுத்தியுள்ளன. (உ-90)

### வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடி

## கொழும்பு சென்ற இளைஞரை சித்திரவதை செய்த படையினர்

வல்வெட்டித்துறை, ஜூன், 23

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்ற இளைஞர் ஒருவர் போராளி எனச் சந்தேகிக்கப்பட்டு வழியில் சாளியபுரம் தடைமுகாமில் தடுத்து வைக்கப் பட்டார்.

பின்னர் அவர் தலைகீழாகத் தொங்க விடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சு. யோகலிங்கம் என்னும் 23வயது இளைஞனுக்கே இக்கதி ஏற்பட்டது.

அவர் தமக்குஏற்பட்ட துக்ககரமான அனுபவத்தை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடிக் கொழும்பு சென்றுவிட்டு அங்கிருந்து தனியார் பஸ் ஒன்றின் மூலம் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தேன்.

வழியில் அநுராதபுரத்திற்கும் மதவாச்சிக்கும் இடையிலுள்ள சாளியபுரம் தடுப்பு முகாமில் பயணிகள் சோதனைக்குள்ளானது.

சகல பயணிகளும் சோதனையின் பின் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர். ஆனால் என்னை மட்டும் சிப்பாய்கள் தம்முடன் தடுத்து வைத்திருந்தனர்.

என்னிடமிருந்த எனது நண்பர்களின் அடையாள அட்டைகளும், பாஸ்போட்டுக்களுமே என்மேல் சிப்பாய்கள் சந்தேகம் கொள்ளக் காரணமாயின.

சிப்பாய்களின் அடி உதைகளைப் பெற்றுக் கொண்டபின் என்னை அநுராதபுரம் பொலீஸாரிடம் கையளித்தனர்.

பொலீஸார் ஒருதனியறையில் என்னை அடைத்து வைத்தனர்.

என்னிடமிருந்த ஆயிரம் ரூபா பணமும் பொலீஸாரல் பறிமுதல் செய்யப்பட்டது.

என்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடித்தனர். சித்திரவதை செய்தனர். வாய் கட்டப் பட்டநிலையில் என்னால் கதறி அழக் கூடமுடியவில்லை.

கூட இருந்த சிங்களக் கைதிகள் எனது சாரத்தைப் பறித்து எனது கழுத்த நெரித்து என்னைத் தாக்கினர்.

நான் பட்ட சித்திரவதைகளால் ஒரு நோயாளியானேன்.

இதனால் 11 நாட்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தேன்.

ஆஸ்பத்திரியைப் பார்வையிட வந்த முஸ்லிம் சட்டத்தரணி ஜனாப் எ. சி. எஸ். ஹமீட் என்மீது இரங்கி அநுராதபுரம் நீதிமன்றத்தில் என்னை விசாரணைக்காக நிறுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்தார்.

நீதி மன்றத்தில் நான் நிரபராதி என முடிவு செய்யப் பட்டு 35 நாள் சிறை அனுபவத்தின் பின் விடுதலை செய்யப் பட்டேன்.

— இவ்வாறு யோகலிங்கம் கூறினார். (உ-எ-160)

## இந்துஆலயங்களை காப்பாற்றக்கோரி அமைச்சருக்குமகஜர்

கொடிகாமம், ஜூன் 23

இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்குமாறு கோரி சரசாலை இந்து இளைஞர் மன்றம் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு மகஜர்ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

''இந்து ஆலயங்கள் அரசபடைகளால் தாக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன; இந்துகலாசாரம், தமிழ்க் கலாசாரம் அழிக்கப்பட்டு வருகின்றது.

மாவிட்டபுரம்முருகன் கோயில், வல்லிபுரக் கோவில் போன்ற பிரபலமான இந்து கோயில்களுக்கு அருகாமையில் இராணுவம் முகாமிட்டிருப்பதால் மக்களின் வழிபாட்டுக்குக் குந்தகம் விளைந்துள்ளது.

பாரம்பரியமாக உள்ள எமது சமய, தமிழ்க்கலாசாரங்கள் அழிந்தொழிந்து போகாவண்ணம் காப்பாற்றப்படவும்—

இராணுவ முகாம்களை அகற்றவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

—இப்படி அம்மகஜரில் கூறப்பட்டுள்ளது. (உ-75)

## காக்கைதீவு மக்கள் குடி தண்ணீரின்றி

### கஷ்டப்படுவதாகப் புகார்

யாழ்ப்பாணம், ஜூன்23

இராணுவ நடவடிக்கைகளினால் கொட்டடிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து காக்கைதீவு மாதிரிக் கிராமத்தில் குடியேறியுள்ள ஒரு பகுதி மக்கள் குடி தண்ணீர் மற்றும் சுகாதார வசதியின்றி பெரும் கஷ்டப்படுவதாக யாழ் அரச அதிபருக்கு முறையிடப்பட்டிருக்கிறது.

கொட்டடி ஸ்ரீமீனாட்சி சனசமூக நிலையத்தின் முதல்வர் திரு. எஸ். விஜயரட்ணம் இது தொடர்பாக மகஜர் ஒன்றை அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

★ குடி தண்ணீர் தேடி [illegible] இப்பகுதி மக்களின் கஷ்டத்தைக் களைய தற்காலிக குடி தண்ணீர் வசதியாவது ஏற்படுத்திக்கொடுங்கள்.

★ சுகாதார வசதியில்லாததால் இப்பகுதியில் சொறி, சிரங்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இம்மக்களை தொற்று நோயிலிருந்து காப்பாற்ற உடன் நடவடிக்கை எடுங்கள் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு தகுந்த நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

—இப்படி அந்த மகஜரில் கோரிக்கை விடுக்கப் பட்டிருக்கிறது. (உ)

### ரிவோல்வர்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 23

அண்மையில் கட்டுநாயக்கா விமானத்தளத்தில் இருந்து கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் ஆறு ரிவோல்வர்களில் மூன்று நீர்கொழும்பில் ஒரு வளவினுள் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப் பட்டன.

விமானத்தளத்தின்மீது கடந்த 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் சம்பந்தமாக கைது செய்யப் பட்ட சந்தேக நபர்களில் ஒருவரின் வீட்டு வளவினுள் இந்த மூன்று ரிவோல்வர்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

### சீனத் தூதரிடம் மகஜர்

கொழும்பு, ஜூன் 23

'வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து ஸ்ரீலங்காவைக் காப்பாற்றுங்கள்'— இப்படிக் கோரும் மகஜர் ஒன்று கடந்த வியாழன் கொழும்பில் உள்ள சீனத் தூதரிடம் கையளிக்கப்பட்டது.

இருபத்தைந்துக்கு அதிகமான பௌத்த அமைப்புக்களின்சார்பில் இம் மகஜர் கையளிக்கப் பட்டது.

அதற்கு முன்னர் மகஜருடன் பௌத்த பிக்குகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் ஊர்வலமாக சீனத் தூதராலயத்துக்குச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

நீயே செய்யக் கூடியதற்குப் பிறரை ஏவல் கொள்ளாதே.

— ஜெபர்ஸன்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

23.6.1987 த.பெ.இல:- 23


## காற்றுள்ள போது தூற்ற வேண்டாமோ?

இந்திய மக்கள் யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கும் நிவாரண உதவி உத்தியோக பூர்வமாகக் கிடைக்க இருக்கிறது.

நிவாரணப் பொருள்கள் யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் விதத்தில ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அவை கொழும்புக்குப் போகாமல் சென்னையிலிருந்து நேரடியாகக் காங்கேசன் துறைக்கு வருகின்றன. நிவாரணப் பொருள்களை ஏற்றி வரும் முதலாவது கப்பல் நாளை சென்னையிலிருந்து புறப்படுகின்றன.

யாழ்ப்பாண மக்களுக்கு, இந்திய மக்கள் வழங்கும் நிவாரணம் மனிதாபிமானத்தின் பாற்பட்டது. அடுத்தவன் பசித்திருக்க, தான் மட்டும் புசிக்காது, கொடுத்து உண்ணும் பண்பின் பாற்பட்டது.

பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவளிப்பதற்கு மூன்றுமவர் ஒருவரின் அனுமதி தேவை என்றது வெறும் சட்டப்பாங்கானது. பசித்தவன் உயிர் போகும்வரை மூன்றுமவரின் அனுமதிக்காகக் காத்திருக்க முடியுமா? ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா?

அதனால் தான், பசித்திருக்கும் யாழ்ப்பாண மக்களின் கொடும்பசி போக்கும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசின் அனுமதி கோராமலே, இந்தியா வான ஊர்திகள் மூலம் உணவுப் பொருள்களைப் போட்டது.

நியாயத்தின் பக்கம் நின்று தர்மம் இயற்றிக் காட்டிய இந்தியாவுக்கு வெற்றி கிடைத்தது. ஸ்ரீலங்கா அரசு தனது அனுமதியில்லாமல் நிவாரண உதவி வழங்க முடியாது; வழங்கியிருக்கக் கூடாது என முரண்டு பிடித்த போதிலும், மிண்டப் பார்த்த போதிலும், இறுதியில் தோல்வி கண்டு, ஒப்பந்தம் மூலம் நேராகவே நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுவிட்டது!

எப்படியோ இந்தியாவின் நிவாரணப் பொருள்கள் இங்கு கிடைக்கப் போகின்றன. அவற்றைச் சீராக விநியோகிக்கும் பொறுப்பு அரசாங்க அதிபருக்கும் மற்றும் யாழ்ப்பாணச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கும் உண்டு.

முன்னுரிமைத் திட்டம் வகுத்து பாதிப்பின் தன்மை, குடும்ப நிலை என்பனவற்றை அளவு கோல்களாக்கி மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்க வேண்டும்.

நிவாரணப் பொருள்களை குடாநாட்டு மக்களுக்கு மட்டும் தான் வழங்க வேண்டும் என்பதல்ல.

இராணுவ அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டு மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் அகதிகளாகி இருப்பவர்களுக்கும் இந்த நிவாரண உதவி கிடைக்க வேண்டும். வெளிமாவட்டங்களிலிருந்து குடாநாட்டில் அகதிகளாக வந்திருப்பவர்களுக்கும் நிவாரண உதவி வழங்கப்பட வேண்டும்.

நிவாரண உதவிக்கு தகுதி உடையவர்களுக்கு அது கிடைக்காமற் போகும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது. தில்லுமுல்லுகளுக்கு இடம் தாராத சீரான, தெளிவான வழிமுறைகள் சரியாக வகுக்கப்பட்டு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படுவது மிக மிக அவசியம்.

அது மட்டுமா?

நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை மேற்பார்வை செய்ய வரும் இந்திய அதிகாரிகள், இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஆகியோருக்கு இராணுவ அட்டூழியத்தின் கொடூரப் பற்கள் குடாநாட்டை, அதன் மக்களை, அவர்களின் உடைமைகளை, ஆலயங்களை, பாடசாலைகளை, ஆஸ்பத்திரிகளை, கலாசார பண்பாட்டு நிலையங்களை எப்படிக் குத்திக் குதறி நிர்மூலமாக்கி இருக்கின்றன என்பதைக் காண்பிக்க வேண்டும்.

அப்பாவி மக்களைக் கொன்றுவிட்டு, போராளிகளைக் கொன்றதாக ஸ்ரீலங்கா அரசு எப்படிப் பொய்சொல்லி வந்தது, வருகிறது என்பதையும்—

ஆலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் போன்ற தனித்துவ சேவைக்குரிய இடங்களைத் தகர்த்துவிட்டு எப்படி அரசு மூடி மறைக்கிறது என்பதையும்—

மொத்தத்தில் தமிழ் இன அழிப்பும், தமிழ்ப் பிரதேச நிர்மூலமாக்கலும் எவ்வாறு திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன என்பதையும்— ஆதார பூர்வமாக அவர்கள் கிரகித்துக் கொள்ளக்கூடியதாக நேரில் அழைத்துச் சென்று காண்பிக்க வேண்டும். பிரசைகள் குழுக்கள் போன்ற பொதுமக்கள் இயக்கங்கள் இதில் ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியம்.

அதற்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட சீரான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஸ்ரீலங்கா அரசின் சர்வதேச ரீதியிலான பொய்ப் பிரசாரத்தை முறியடித்து உண்மையை உலகுக்கு எடுத்துக்காட்ட முடியும்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளத் தெரிய வேண்டாமோ?

# மீண்டும் போட்டியிட ஷெயில்சிங் மறுப்பு!

### எதிரணி கோரிக்கையை நிராகரித்தார்

புதுடில்லி, ஜூன் 22

எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக இரண்டாம்முறையாகபோட்டியிடப் போவது இல்லை என்று ஜனாதிபதிஷெயில் சிங் அறிவித்து விட்டார்.

அவசரமாக தன்னை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்த பிரதமர் ராஜீவ் காந்தியிடம் திரு. ஷெயில் சிங் இப்படித் தெரிவித்து விட்டார்.

எதிர்க்கட்சிகள் தங்கள் வேட்பாளராக திரு. ஷெயில் சிங்கை நியமிக்க முயற்சிகள் எடுத்து வருவதாகபுதுடில்லியில் ஞாயிறு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு நிலவியது.

இதைத் தொடர்ந்தே பிரதமர் காந்தி, ஜனாதிபதியை அவசரமாகச் சந்தித்தார். சந்திப்பு ஒரு மணித்தியாலத்துக்கு மேல் நீடித்தது.

பிரதமருக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர்களான திரு. எச். எம். பஹுகுண (லோக்தள்), ஜோர்ஜ் பெர்ணண்டஸ் (ஜனதா), உபேந்திரா (தெலுங்கு தேசம்), பி. உன்னிக் கிருஷ்ணன் (காங்கிரஸ்-எஸ்) ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்தனர்.

பின்னர் இந்திரா காங்கிரஸ் அமைச்சர்களான பூட்டாசிங், பஜன்லால், ராஜேஸ்வரபைலட் ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

★ இரண்டாம் முறையாக நான் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட விரும்பவில்லை.

★ பிரதமர் மீது கடும் நடவடிக்கை எதனையும் எடுப்பது குறித்தும் நான் சிந்திக்கவே இல்லை.

—இப்படி ஜனாதிபதி ஷெயில் சிங் பிரதமரிடம் தெரிவித்து விட்டார்.

ஜனாதிபதி வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் கடைசித்தினம் நாளையாகும்.

இது வரை 22பேர் நியமனப்பத் திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். (உ—எ)

### பாலைவனத்தில் தேன் நிலவு!

லண்டன், ஜூன் 21

சஹாரா பாலைவனத்தில் தேன்நிலவு கழித்த புதுமணத் தம்பதி பற்றி தகவல் வந்துள்ளது.

மைக்கல் ஆஷர் என்பவர் மரியாஞே பிட்டா பேரு என்பவரைத் திருமணஞ் செய்தார்.

இருவரும் புதிய முறையில் தேன்நிலவு கழிக்கத் தீர்மானித்தனர்.

தம்பதிகள் ஒட்டகம் ஒன்றில் ஏறி சஹாரா பாலைவனத்தைக் கடக்க ஆரம்பித்தனர்.

பாலைவனத்தைக் கடக்க 271 தினங்கள் எடுத்தன.

ஒட்டகத்திலும், நடந்தும் பாலைவனத்தைக் கடந்து எகிப்தில் நைல் நதிக்கரையை அடைந்தனர்.

சஹாராதான் உலகிலேயே பெரிய பாலைவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ—எ)

## மன்னிப்புக் கோரும் தீவிரவாதிகள்!

மாட்ரிட், ஜூன் 22

ஸ்பெயினில் நடந்த கார்க்குண்டு வெடிவிபத்து குறித்து பாஸ்க் இன தீவிரவாதிகள் அமைப்பு மன்னிப்புக் கோரியுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்களின் உறவினர்களிடமே இந்த அமைப்பு மன்னிப்புக் கோரியுள்ளது.

தவறுதலாக மக்கள் கூடும் சந்தையில் இக் கார்க் குண்டு வைக்கப்பட்டு விட்டது. சரியான இடத்தில் அது வைக்கப்படவில்லை. இனிமேல் நடத்தப்படும் தாக்குதல் சரியான இலக்கு மீது நடத்தப்படும்— இப்படி பாஸ்க் இன தீவிரவாத அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடையில் கார்க்குண்டு வெடிச் சம்பவம் இடம்பெற்ற பார்சிலோனியா பட்டினத்தில் நேற்றுதீவிரவாதத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

சுமார் எழுபதினாயிரம் பேர் வரை இதில் கலந்து கொண்டனர். (உ-எ)

## ரஷ்யா ஒத்துழைப்பு; அமெரிக்கா ஆச்சரியம்!

வாஷிங்டன், ஜூன் 22

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் சோவியத் யூனியன் ஆச்சரியப்படத்தக்க முறையில் அமெரிக்காவுடன் ஒத்துழைப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள உதவி அமைச்சர் மைககல ஆமகோஸ்ற் இதனை அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் தரும் இந்த ஒத்துழைப்புக்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளும் பாராட்டுத் தெரிவித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஈரான் ஈராக் மேற்கொள்ள வேண்டும்: தவறின் ஆயுதங்களை இரண்டு நாடுகளுக்கும் விற்பது தடுக்கப்படும்.

—இப்படி பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றப் பதினைந்து உறுப்பு நாடுகளும் முன் வந்துள்ளன.

வளைகுடா யுத்தத்தில் ஈரான் வெற்றியீட்டுவது தடுக்கப்பட வேண்டும் என்பதில் பாதுகாப்புச்சபை நாடுகள் உறுதியாக உள்ளன.

—இவ்வாறு உதவி அமைச்சர் ஆமகோஸ்ட் தெரிவித்தார். (உ—எ)

**வெளி உலகில்**

## 31 துருக்கியர் படுகொலை!

அங்காரா, ஜூன் 22

குர்டிஷ் தீவிரவாதிகள் துருக்கி எல்லைக்குள் புகுந்து 31 பொதுமக்களைக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒன்பது பேர் குழந்தைகள் என்று தெரிகிறது.

தீவிரவாதிகளுக்கு தான் ஆதரவு கொடுக்கவில்லை என்று சிரியா அறிவித்து விட்டது.

இதுவரை குர்டிஷ் தீவிரவாதிகளினால் சுமார் 700க்கு அதிகமான துருக்கியர்கள் கொல்லப்பட்டனர். (உ—எ)

## நஜிபுல்லா உத்தரவு!

காபூல், ஜூன் 22

தேசிய இணக்கக் கொள்கையை நிராகரிக்கும் கிளர்ச்சியாளர்களை நசுக்கும்படி இராணுவத் தளபதிகளுக்கு ஆப்கானிஸ்தான் தலைவர் நஜிபுல்லா உத்தரவிட்டிருக்கிறார்.

காபூல் வானொலிஇத் தகவலைத் தெரிவித்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (உ—எ)

# புத்தரின் போதனையைப் பின்பற்றாத பிக்குகளினால் நாட்டிற்கு வந்த கதி!

### லண்டன் சஞ்சிகையின் தலையங்கம்

> ''எல்லா உயிரினங்களும் மகிழ்ச்சியாக இருக்கட்டும் — தமிழனைத் தவிர'' என்ற தலைப்பில் லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ்டைம்ஸ்' மாத சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம் இங்கு பிரசுரமாகின்றது.
>
> ஏப்ரல் இதழில் இத் தலையங்கம் வெளியானது.

ஸ்ரீலங்காத் தலைநகரில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இது சர்வதேச ரீதியில் கண்டிக்கப்பட்டது.

கோழைத்தனமான, மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான சம்பவம் என்று சரியாகக் கண்டிக்கப்பட்டது.

நாமும் அவர்களுடன் சேர்ந்து கண்டிக்கத் தயங்கவில்லை.

எப்படியாயினும் கொழும்புப் பயங்கரத்தை வைத்து, பல ஆண்டுகளாக தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டு வரும் அரச பயங்கரவாதத்தை மன்னிக்க முடியாது; ஒருவர் அதைக் குறைத்து மதிப்பிடவும் முடியாது.

தமிழ்ச் சமுதாயம், அவர்களின் தனித்தன்மை வாய்ந்த கலாசாரம் முதலியவற்றை அழித்து ஒழிக்கவே இந்த வன்செயல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அரச துணையுடன் நடத்தப்பட்டது 1983 ஜூலை இன ஒழிப்பு நடவடிக்கை. இரண்டாயிரம் தமிழர்வரை அப்போது கொல்லப்பட்டனர்.

பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புப் படையினரால் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தினமும் தமிழர் கொல்லப்படுவது வழக்கமாகி விட்டது.

அரச துருப்புக்களினால் கொல்லப்படும் தமிழரின் எண்ணிக்கை திட்டமிட்ட இலக்கை அடையாத பட்சத்தில் அதை அடைவதற்கு ஊர்காவல் படை என்ற பெயரில் காடையர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

தமிழர் நூற்றுக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர்; வீடுகளை விட்டு துரத்தப்படுகின்றனர். பின்னர் அவ் வீடுகள் எரிக்கப்படுகின்றன.

வீடுகள், பாடசாலைகள், வாசிகசாலைகள், சன சமூக நிலையங்கள், ஆலயங்கள், தேவாலயங்கள், ஆஸ்பத்திரிகள் ஆகியவை ஹெலிக்கொப்டர், விமானங்களின் தாக்குதல்களுக்கு ஆளாகின்றன; சேதமாக்கப்படுகின்றன.

இவை கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழரின் 'தினசரி உணவு' ஆக மாறிவிட்டது.

அத்தமிழருக்கு புத்தாண்டு இல்லை, தீபாவளி இல்லை. கிறிஸ்மஸ் இல்லை.

கத்தி முனையில் வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையே தமிழர் போராடுகின்றனர்.

காணமற் போனவர்களைத் தேடுவது; கொல்லப்பட்டவர்களைப் புதைப்பது; தகனம் செய்வது; ஒரு அகதி முகாமில் இருந்து இன்னொரு அகதி முகாமுக்கு இடம்மாறுவது — இதுதான் தமிழரின் அன்றாடக் கடமையாகி விட்டன.

பல தரம் நூறுக்கு மேற்பட்ட தமிழர் ஒரே முறையில் கொல்லப்பட்டிருக்கின்றனர். இதற்காக ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதியில் வாழ்பவர்கள் ஒரு இரவு நித்திரையைக் கூட இழந்திருக்கமாட்டார்கள்.

இப்படியான சம்பவம் கொழும்பு பொதுசனத் தொடர்பு சாதனங்களில் இடம்பெறமாட்டா.

ஆனால் அப்படியான சம்பவங்கள் இடம்பெறவில்லை என்று அரசு மறுக்கும்; அமைச்சர்கள் மூடிமறைப்பர்.

எப்படியாயினும் கொழும்பில் ஏப்ரல் 21 இல் நடந்த படுகொலை பெரும் விளம்பரத்தைப் பெற்றது; பலமாக கண்டிக்கப்பட்டது. பின்னர் பெரிய அளவில் அப்பாவித் தமிழர் பழி வாங்கப்பட்டனர்.

ஏன் இந்த பாரபட்ச போக்கு?

தமிழர்கள் என்றால் அவர்கள் மனிதர்கள் இல்லை என்ற காரணமா? அல்லது அவர்கள் கொல்லப்படவேண்டியவர்களா?

தமிழர்களைக் கொல்லும் செயல் கண்டிக்கப்படக்கூடிய செயல் அல்ல என்ற காரணமா?

எல்லா உயிரினங்களும் நல்லாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்— இதுவே எல்லா பௌத்தர்களின் தாரக மந்திரம்.

ஆனால் பௌத்த பிக்குகளோ தமிழர்கள் அரக்கத்தனமான முறையில் கொல்லப்படுவதைப் பார்த்து மௌனமாக மட்டும் இருக்கவில்லை—

இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி குண்டு வீசி அதிக தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டமும் நடத்துகின்றார்கள்.

'எல்லா உயிரினங்களும் இன்புற்றிருக்க வேண்டும்'— என்ற தாரக மந்திரம் இதனால் கருத்தற்றதாகிறது.

புத்த பகவான் போதனை செய்த பௌத்த நெறியை அவர்கள் பின்பற்றவில்லை.

அணியும் மஞ்சள் அங்கி அன்பு, சகிப்புத்தன்மை, கருணை ஆகியவற்றைப் பிரதிபலிக்கவில்லை.

வெறுப்பு, சகிப்புத்தன்மையற்ற குணம், இரக்கமின்மை ஆகியவற்றை மூடிமறைக்கவே மஞ்சள் அங்கி பயன்படுகின்றது. உலகப் பற்றை தங்கள் சகாக்களுக்கு காட்டும் சின்னமாகவே இந்த அங்கி பயன்படுத்தப்படுகின்றது.

1975 இல் வால்டர் ஷுவார்ஸ் எழுதினார்.

'வட அயர்லந்து, சைப்பிரஸ் ஆகிய இடங்களில் இடம்பெறுவதை ஒத்த வன்செயல்கள், பதில் வன்செயல்கள் ஆகியவற்றின் தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**பொய்யாமொழி**



**குறள்:**

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

**பொருள்:**

(செயலை முடிப்பதற்கு ஏற்ற) காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டும் எனக் கருதினாலும் கைகூடும்.

**சமய சந்நிதிகளில்**

### நயினையில் வெள்ளியன்று கொடி

யாழ்ப்பாணம், ஜூன் 23

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்தமாதம் 11 ஆம் திகதி தெப்போற்சவத்துடன் முடிவடையும் இத்திருவிழாவை ஒட்டி, பொதுமக்களின் வசதிக்காக ஆலயத்தில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

திருவிழாவுக்கு வரும் அடியார்கள் தமது அடையாள அட்டையை தம்முடன் எடுத்து வருமாறு அறங்காவலர் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-10)

**வாசகர் திருமுகம்**

## ஒற்றுமையைக் காட்ட இதுவே தக்கதருணம்

இந்திய நிவாரண உதவிகளை ஏற்றிக் கொண்டு இந்தியக் கப்பல் நாளை காங்கேசன் வருகின்றது.

தமிழ் மக்களின் தற்போதைய துயர் நிலையைத் துடைப்பதற்கு இந்திய அரசின் உணவு உதவி மட்டும் போதாது. அரசியல் உரிமையுடன் தமிழர் தலை நிமிர்ந்து வாழவும் இந்திய அரசின் உதவி உடனடியாக வேண்டப்படுகிறது.

உணவை விநியோகிக்க யாழ் பகுதிகளுக்கு வரும் இந்திய அதிகாரிகளுக்கு தமிழ் மக்களின் இன்னலுள்ள நிலையை எடுத்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பொது ஸ்தாபனங்கள், பிரசைகள் குழுக்கள், ஆசிரியர்கள், மீனவர்கள் ஆங்காங்கே பெருமளவில் திரண்டு எமது நிலையை அவர்களுக்கு எடுத்துக் காட்ட — எமது உரிமைகளை வற்புறுத்த இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தவேண்டும்.

மேதினத்தில் கரைபுரண்ட மக்கள் கூட்டத்தைவிடவும், அதிகமான மக்கள் அமைதியாகத் திரண்டு அவர்களுக்கு எமது ஒன்றுபட்ட நிலையை எடுத்துக் காட்ட முன்வரவேண்டும். இதுவே இப்போது முக்கியமான காரியமாகும்.

ஆனைக் கோட்டை. சித்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCB

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANC. LTD.

# உதயன்

23 — 06 — 1987 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCB

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

# ஸ்ரீலங்காவின் இராணுவத் தூதுக்குழு பாகிஸ்தானில்

புதுடில்லி, ஜூன் 23

ஸ்ரீ லங்கா இராணுவத் தூதுக்குழு ஒன்று பாகிஸ்தான் சென்று உள்ளது.

விமான மூலம் இந்தியா உணவுப் பொதிகளை யாழ் குடாநாடுமீது போட்ட பின்னர்தான் இக்குழு இஸ்லாமபாத் சென்றது.

இது குறித்து அரசு தீவிர கவனம் செலுத்தப்படுவதாக இந்திய அரசு அறிவித்திருக்கின்றது.

விமான மூலம் உணவுப்பொதி போட்ட சம்பவத்துக்குப் பின்னர், அமைச்சர்கள் ரணில் விக்ரமசிங்க, லலித் அத்துலத் முதலி ஆகியோரும் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## இந்திய ஜனாதிபதித் தேர்தல்:

# எதிரணி வேட்பாளர் கிருஷ்ண ஐயர்

புதுடில்லி, ஜூன் 23

எதிர்க் கட்சிகளின் வேட்பாளராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. வி. ஆர். கிருஷ்ணஐயர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்.

இத் தகவலை ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என். ரி. ராமராவ் நேற்று வெளியிட்டார்.

23 எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் இத் தெரிவு இடம் பெற்றது என்றும் திரு. ராமராவ் சொன்னார். 1915இல் பாலக்காட்டில் பிறந்த திரு. கிருஷ்ணஐயர் கேரள மாநிலத்தின் முதலாவது கம்யூனிஸ்ட் மந்திரி சபையில் அமைச்சராகப் பணியாற்றியவர். (உ-எ)

## ஸ்ரீலங்காவில்

# அமெரிக்கத் தலையீடு என்பதே உண்மை

## கம்யூ. பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 23

இந்தியாவுக்கு எதிராகச் செயல்படுபவர்களின் பின்னால் அமெரிக்கா உள்ளது. உண்மையில் ஸ்ரீலங்காவில் அமெரிக்காவின் தலையீடுதான் உண்டு.

- இப்படி ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. கே. பி. சில்வா அறிவித்திருக்கின்றார்.

இந்தியா உண்மையிலேயே நல்லெண்ண அடிப்படையில்தான் ஸ்ரீலங்காவுக்கு உதவ விரும்புகின்றது.

இதனை சிலர் தலையீடாக கருதுகின்றனர்; எதிர்ப்பிரசாரமும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய – ஸ்ரீலங்கா உறவு விரைவில் சீராக்கப்படவேண்டும். இல்லை என்றால் நன்மையடையப் போவது அமெரிக்காவே.

இந்திய மத்தியஸ்துடன் டிசம்பர் 19 யோசனைகளின் அடிப்படையில் அரசும் தமிழர் அமைப்புக்களும் பேச்சுக்களை நடத்தி அரசியல் தீர்வு காணவேண்டும்.

இப்படி திரு. கே. பி. சில்வா தெரிவித்தார். (-எ)

## புத்தரின்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை ஸ்ரீலங்கா அனுபவிக்காமல் இருக்க வேண்டுமானால், இணக்கம் காணவேண்டிய மிதவாதக் கொள்கையை ஏற்கக்கூடிய தயார் நிலையில் இருக்க வேண்டும்.

'மொழி, கல்வி, தொழில் வாய்ப்பு ஆகியன குறித்து இனங்களுக்கு இடையேயான அணுகுமுறை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்குக் காலம் பிந்திவிட்டதா?

'இத்தீவின் எதிர்காலத்தில் தமிழருக்கும் ஓர் இடம் உண்டு என்று மீண்டும் உறுதிப்படுத்தாது குண்டுகள் வெடிக்கும் வரையும், சிறைகள் நிரம்பும் வரை, ஸ்ரீலங்காத் தலைமைத்துவம் காத்து இருக்குமானால் அது துக்ககரமானதாகவே அமையும்'— இப்படி வால்டர் ஷுவார்ஸ் சொன்னார்.

பன்னிரண்டு ஆண்டுகள் சென்று விட்டன. குண்டுகள் வெடிக்கின்றன. சிறைகள் நிறைந்து விட்டன; நிரம்பி வழிகின்றன.

தீவின் எதிர்காலத்தில் தமிழருக்கும் ஓர் இடம் இருக்கும் என்ற உறுதியுரை, தூரத்து அழுகைக் குரலாகவே தெரிகிறது.

# நிதர்சனம் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

நிதர்சனம் ஒளிபரப்பு சேவை, இன்று முதல் செவ்வாய், சனி ஆகிய இரு தினங்களிலும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதுவரை சனிக்கிழமைகளில் மட்டுமே இச் சேவை நடைபெற்று வந்தது. (உ-ள)

# விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 23

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரசைகள் குழுக்களும் தத்தமது பகுதிகளில் பாதிக்கப் பட்டவர்கள் பற்றிய விவரங்களை பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு இணைப்புக் குழுவின் அமைப்பாளர் நாயகம் திரு. எஸ். சிவானந்தராசா தெரிவித்தார். (உ-ள)

# 650 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களினால் 650 பொது மக்கள் உயிர் இழந்துள்ளதாக ஆதாரபூர்வமாக தெரிகின்றது என்றுஅகதிகள் புனர்வாழ்வுக் கழக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்துள்ளதால் முழுமையான சேத விபரங்களும், உயிர் இழப்புகளும் இன்னும் சில மாதங்களின் பின்பே தெரியும் என்றும் அவர் சொன்னார். (உ-10)

# ஒரேயொரு தனியார் பஸ் சேவையில்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சிப் பகுதியில் அரச அத்தாட்சிப் பத்திரம் பெற்ற ஒரே ஒரு தனியார் பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுகிறது.

பல வாகனங்கள் காப்புறுதிப் பத்திரங்களோ, அனுமதிப் பத்திரங்களோ இல்லாத காரணத்தினால் சேவையில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கின்றன. (உ-10)

# இரண்டு கப்பல்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து புறப்படும்.

கப்பல்கள் ஒரு நாளைக்குள் காங்கேசன்துறை போய்ச் சேர்ந்துவிடும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இரண்டு கப்பல்களில் உணவுப் பொருள்கள் ஏற்றப்படுவது இன்று செவ்வாய்க்கிழமை தொடங்கும்.

அரிசி, கோதுமைமா, சீனி, பருப்பு, மருந்து வகைகள், மண்எண்ணை, துணிவகைகள் மற்றும் புளி உட்பட உப உணவுப் பொருள்கள் என்பனவும் நிவாரணப் பொருள்களாக ஏற்றப் படும்.

உணவுப் பொருள்கள் அனைத்தும் நேற்றே சென்னை துறைமுகத்துக்கு வந்துவிட்டன.

## எம். ஜி. ஆர். பார்வையிடுவார்

சென்னைத் துறைமுகத்தில் கப்பல்களில் இன்று நிவாரண உணவுப் பொருள்கள் மருந்துகள் ஏற்றப்படுவதை முதலமைச்சர் இராமச்சந்திரன் இன்று பார்வையிடக் கூடும்.

இத்தகவலை செய்தித் துறை அமைச்சர் வி.வி. சுவாமிநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

துறைமுகத்துக்கு வரும் அளவுக்கு முதலமைச்சரின் உடல்நிலை மிக நன்றாகவே இருக்கின்றது என்றும் அமைச்சர் சொன்னார். (அ-எ)

# ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மணியந்தோட்டம் பகுதியில் நேற்று நண்பகல் 11-30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று மிகவும் தாழ்வாகப் பறந்து நோட்டமிட்டது. (உ-10)

# ஆயுதப் போரை கைவிடாத வரை பேச்சு வேண்டாமாம்

கொழும்பு, ஜூன் 23

தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடாதவரை சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டாம்.

இப்படி ஸ்ரீலங்கா பௌத்த சம்மேளனம் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சம்மேளனத்தின் வருடாந்த மாநாட்டில் இது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் திரு. ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அத்தீர்மானம் வருமாறு:-

இறைமை, சுயாதிக்கம் உள்ள பௌத்த நாடாக ஸ்ரீலங்காவைப் பிரகடனப்படுத்த வேண்டும்

தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போடாத வரை சமரசப் பேச்சுக்கள் என்பது அர்த்தமற்ற ஒன்று.

ஆயுதங்களைக் கீழே வைத்து பச்சைக்கொடியைத் தீவிரவாதிகள் காட்டும் வரை பேச்சுக்கள் பற்றி அரசு யோசிக்கக்கூடாது.

இப்படி அத்தீர்மானத்தில் கூறப்பட்டுஉள்ளது. ( -எ)

# ஸ்ரீலங்கா அரசாங்......

ஆண்டுகளாக ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள முடியாதபடி இவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சில தமிழர் இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையங்களிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கைதான முதல் மாதத்தில் இவர்கள் அரசுப் படையினரால் கடும் சித்திரவதைக்குட்படுத்தப்படுகின்றார்கள்.

இராணுவ முகாம், பொலீஸ் நிலையங்களில் தான் இச் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன.

## சித்திரவதை

சித்திரவதையின்போது சில கைதிகள் உயிரிழக்கின்றனர். சித்திரவதைக்குப் பின்னர் பலர் காணமற் போய்விட்டனர் என்று அரசு அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

அப்படி 'காணமற் போனதாக' அறிவிக்கப் பட்டவர்கள் கடும் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்துவிட்டார்கள் என்பதற்கு பலமான காரணங்கள் மன்னிப்புச் சபைக்குக் கிடைத்துள்ளன.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழர் இப்படிக் காணமற் போய் விட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்களிலும் பொலீஸ் நிலையங்களிலும் தான் இச் சித்திரவதைகள் இடம் பெறுகின்றன.

## அதிரடிப் படை

அங்கு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் விசேட அதிரடிப் படையினர்தான் இதனை நடத்துகின்றனர்.

இச் சித்திரவதைகள் குறித்து சத்தியப்பிரமாணம் செய்து தரப் பட்ட வாக்குமூலங்கள் மன்னிப்புச் சபைக்குக் கிடைத்துள்ளன.

தலைகீழாகத் தொங்க விடுவது: சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பிகளினால் தாக்கப்படுவது, காயங்களின் மேல் மிளகாய்த் தூளைப் பூசுவது போன்ற சித்திரவதைகள் சர்வ சாதாரணமாக இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையங்களில் இடம்பெறுகின்றன என்று முறைப்பாடுகள் வந்துள்ளன.

தகவல்களைப் பெறுவதற்காகவே படையினர் இப்படியான சித்திரவதைகளில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலைகளில் சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு நிலைமை எமக்கு கவலையைத் தருகின்றது.

கைதிகளின் பாதுகாப்பை ஸ்ரீலங்கா அரசு உறுதிப்படுத்தி உத்தரவாதம் தரவேண்டும்.

சித்திரவதைகள், கைது செய்யப்பட்டவர்கள் காணமற்போய் விட்டனர் என்று அறிவிக்கப் படுவது- ஆகியவற்றை நிறுத்த ஸ்ரீலங்கா அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## விசாரணை வேண்டும்

காணமற்போனதாக அறிவிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அரசு விசாரணை நடத்தி அறிய வேண்டும்.

ஆனால் இதுவரை 'காணமற் போனவர்கள்' என்று அறிவிக்கப் பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவோ அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்று கணக்குக் காட்டவோ அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

எந்தச் சூழ்நிலையிலும் மனித உரிமை மீறலை நியாயப்படுத்த முடியாது.

சர்வதேச சட்டத்தின் கீழ், 'காணமற்போனவர்கள்' என்று அறிவிக்கப்பட்டவர்கள் விஷயமாக விசாரணை செய்ய வேண்டிய கடமைப்பாடு ஸ்ரீலங்கா அரசுக்கு உண்டு.

— இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் கூறியிருக்கின்றது.

மனித உரிமைகளைப் பேணும் பணிக்காக நோபல் பரிசு பெற்ற ஸ்தாபனம் சர்வதேச மன்னிப்புச்சபை. (உ-எ)

# கட்டுவன்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஷெல்கள் அச்சுவேலி தென்மூலைப் பகுதியிலுள்ள புனித சூசையப்பர் தேவாலயச் சூழலிலும், பத்தமேனிப் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

பலாலியில் இருந்தும் அதே நேரம் ஏவப்பட்ட நான்கு ஷெல்க் குண்டுகள் தெல்லிப்பளையிலுள்ள, கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தினுள் விழுந்து வெடித்தன.

இதனால் பாடசாலைக்கு அருகில் குடியிருந்த பாடசாலை மாணவனான கிருஷ்ணபிள்ளை தர்மசுதன் ( 11 வயது ) திருமதி செல்லர் சந்திரா தேவி (35 வயது), திருமதி செல்லன் வள்ளிப்பிள்ளை (68 வயது) ஆகியோர் படுகாயமுற்று தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (உ-119)

# இந்தியா அத்துமீறி....

கொண்டிருந்தால் இப் பிரச்சினையே ஏற்பட்டிருக்காது.

கேள்வி: இந்தியாவுக்கு அருகில் இருந்துகொண்டு தீவிரவாதத்துக்கு எதிரான முயற்சியில் நீங்கள் வெற்றிபெற முடியுமா?

அமைச்சர்: அரசியல் தீர்வு ஒன்று காணுவதுடன் தீவிரவாதம் முடிவு பெறும். இதை நாம் திரும்பத் திரும்பி உறுதிபடக் கூறி வருகிறோம்.

துரதிருஷ்டவசமாக விடுதலைப் புலிகள் இதை ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை.

இன்னொரு உண்மையும் இத்துடன் குழம்பிப் போயுள்ளது.

பெரிய அயல்நாடு ஒன்றைக் கொண்ட சிறிய நாடு நாம் என்பதே அது.

எமது நலன்களுக்கு எதிராக எவ்வளவோ விஷயங்கள் இந்தியாவில் இடம்பெற்று வருகின்றன. (உ-எ)

# வடமராட்சிக்கு புதிய பஸ்கள்

வடமராட்சிப் பகுதிக்கு பல புதிய பஸ்களை வழங்குவதற்கு பாதுகாப்புஅமைச்சு அனுமதி அளித்துள்ளது

இராணுவத்தினர் இப் பகுதியை தமது கட்டுப் பாட்டினுள் கொண்டு வந்ததையடுத்து அங்கு பஸ் சேவைகளும் சீராக நடைபெறத் தொடங்கி உள்ளன.

புதிய பஸ்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபை உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு எதுவித பஸ்களும் வழங்கப்படாதது குறிப்

# அரசின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் சமையல் உபகரணங்களை இழந்த ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 500 ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன, (உ-ள)

# ஏழாலையில் ஷெல் தாக்கி மூவர் பலி

பலாலி, ஜூன் 23

பலாலி முகாமிலிருந்து நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) வயாவிளான் பகுதியூடாக புன்னாலைக்கட்டுவன் நோக்கியும் –

குரும்பசிட்டியில் இருந்து ஏழாலை நோக்கியும் ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் வெளியேற முயன்றபோது விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தி திருப்பியனுப்பினர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பலாலி குரும்பசிட்டி, வயாவிளான் முகாம்களில் இருந்து மேற்கொள்ளப் பட்ட மோசமான ஷெல் தாக்குதல்களாலும் மூவர் பலியாகினர். அறுவர் காயமடைந்தனர்.

வீடுகள் பல சேதமடைந்தன.

குரும்பசிட்டியைச் சேர்ந்த செல்வி ராதா செந்திநாதன் (29 வயது) செல்வரத்தினம் பொலிஸ்குமார் (8 வயது) அண்ணாமலை இராசரத்தினம் (68 வயது) ஆகியோர் மரணமடைந்தனர்.

கட்டுவனில் இருந்து இடம் பெயர்ந்து ஏழாலைக்கு வந்து குடியிருந்தவர்களே இறந்தவர்களாகும்.

கட்டுவனைச் சேர்ந்த தம்பிமுத்து சின்னராசா, ஏழாலையைச் சேர்ந்த இராசரத்தினம் செல்வராணி (19 வயது) சின்னத்தம்பி தனலட்சுமி (20 வயது), பேபி (6 வயது), சி. தனபாலசிங்கம் (10 வயது). ப. செல்வந்தி (20 வயது) என்போர் காயமுற்று தெல்லிப்பளை வைத்தியசாலையிலும் சுன்னாகம் தனியார் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-119)

# பாகிஸ்தானுக்கு தனது கண்களை வழங்க முன்வந்துள்ள மந்திரி!

கொழும்பு, ஜூன் 23

ஸ்ரீலங்கா – பாகிஸ்தான் உறவுகள் பலமானவை. என்றோ ஒருநாள் எனது கண்களை பாகிஸ்தானுக்கு தானம் செய்வேன்.

- இப்படி அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சொன்னார்.

பிராந்திய, சர்வதேச விஷயங்களில் பாகிஸ்தான் துணிச்சலான நிலைப்பாட்டை எடுத்துள்ளது பாராட்டுதற்குரியது என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

# சிப்பாய்கள் சுட்டு...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

றைய இளைஞரை சிப்பாய்கள் கலைத்துச் சுட்டனர். சிப்பாய்களின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீடு ஒன்றில் நின்ற மாணவி சூடுபட்டு இறந்தார்.

அவரோடு கூட நின்ற அவரது சகோதரி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, காயமடைந்தார்.

அவர் தற்போது மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-ள-160)

# உண்ணாவிரதம்

காங்கேசன்துறை, ஜூன் 23

தமிழ் ஈழ போராட்டத்தையும், ஈழப்போரில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அங்கீகரிக்கக் கோரி இணுவில் கந்தசுவாமி கோவிலில் நேற்று உண்ணாவிரதம் ஒன்று நடைபெற்றது. (உ-68)

# 10 நோயாளர் நேற்று வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளர்களில் பத்துப் பேர் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (உ-10)

★ HORIZON ENTERPRISES ★

பிரயாண ஒழுங்குகள்

✯ டுபாய் ✯ குவைத் ✯ சவூதிஅரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்

சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை

பணிப்பெண்கள் மேசன்

சிங்கப்பூர் பணிப் பெண்கள்

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவிடத்தில் வைத்து மிகத்துரித கதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப் படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [ PASS PORT ] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 23-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday June 23, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org